**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 132 /2015 |
| Deposition of witness | | PW- 3 /LW- 4 |
| Name | | திரு. சதிஷ் |
| Father's/Husband Name | | திரு. சுப்பிரமணியன் |
| Village | | துவரங்குறிச்சி |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 34/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 18th day of December 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற இரண்டாம்நிலை காவலர் 2552 திரு.மாரிமுத்து என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் பட்டுக்கோட்டை தாலுக்கா துவரங்குறிச்சி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனக்கு தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்ததாகவும் போலிசார் விசாரணையில் எங்கள் ஊரை சேர்ந்த வடிவேல் குழந்தைக்கு காதணிவிழாவிற்கு விருத்திற்கு அழைத்தால் நான் 17.09.2013 தேதி நான் அவரது வீட்டிற்கு சென்றதாகவும் மாலை சுமார் 4.30 மணியளவில் வடிவேல் உறவினர் ஆனந்த், அறிவழகன், மணிவண்ணன் மகள்

சாந்தியை அறிவழகன் திட்டியதாகவும் அதை கேட்ட சேகரை அறிவழகன் பிடித்துக்கொள்ள ஆனந்த் சேகரை கிடா வெட்டும் அருவாளால் வலது மணிக்கட்டிலும், வலது கட்டை விரலிலும், சுட்டு விரலிலும் அருவாளால் கிழித்து இரத்த காயம் ஏற்படுத்தியதாகவும் அப்போது நானும் ஜெயஷீலன், செல்வராஜ் மகன் சுசைராஜ் ஆகியோர் விலக்கிவிட்டதாகவும் அப்போது ஆனந்த்குமார் சேகரை பார்த்து தான் வைத்திருந்த அருவாளால் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு சென்றதாகவும் சேகரை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக போலிசார் விசாரணையில் கண்ணுற்ற சாட்சியாகவும் எதிரிக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை இல்லை**</u>

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஓம்/- திரு.த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை